RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2516

OPEN ACCESS

# தமிழரின் விருந்தோம்பல் பண்பாட்டு

**அ. கலைவாணி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு, இந்தியா

# Hospitality Culture of Tamil People

**A. Kalaivani** [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-641 043, Tamil Nadu, India

* Corresponding Author: kalaivani_tam@avinuty.ac.in

Received: 03-08-2022
Revised: 30-10-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Tamils are the masters of hospitality. Among the duties of domestic life, hospitality is the chief thing. You can find this best feature of Tamil people in all the Tamil literary works. The Tamils who have hospitality as the lifeblood of their lives have lived with the thought of 'participatory diversity as the main principle of life'. Strangers are called guests. It is one of the characteristic of Tamil people to treat newcomers with kindness. The husband and wife who lead this life are obliged to their immediate relatives. Apart from that, it is their duty to provide good food and shelter to all who come in search of their home. Hospitality cannot be practiced by the wife alone in the absence of husband. It can only be done if both minds are united. Even if the mind of one of the two is different, the party will not go well, so it is essential that the husband and wife are of similar feelings to make the party. This article is organized in a way to highlight hospitality which is one of the Tamil cultures which is reflected in the literature.

**Keywords:** Tamil people, Hospitality, Kindness, Tamil literary works

## முன்னுரை

விருந்து என்னும் சொல்லுக்கு புதுமை என்று பொருள் விருந்தினர் என்பது புதிதாக வந்து இருக்கக்கூடியவர்கள். அவர் தமது உற்றார் உறவினர்கள் நண்பர்கள் இவர்கள் எல்லாம் விருந்தினராக மாட்டார்கள் நமக்கு யார் என்று தெரியாத புதியவர்கள் தான் விருந்தினர்கள் என்று இலக்கியங்கள் நமக்கு கூறுகின்றன.

'மருந்தே ஆயினும் விருந்தோடுண்' என்கிறார் ஔவையார். அதாவது நாம் உண்கின்ற உணவை புதிதாக வருகின்றவர்களுக்கும் கொடுத்து உபசரிக்கும் பண்பு தமிழர்களுக்கே உரியதாகும்.

## விருந்தோம்பல்

விருந்தோம்பலை இல்லற வாழ்வின் தலையாய கடமையென்று எண்ணி வாழ்ந்த பழந்தமிழர் காலத்தினைக் கருத்தில் கொள்ளாமல் இன்முகத்துடன் விருந்தோம்பினர். இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவி கணவனுடன் இணைந்து மனமகிழ்ச்சியுடன் விருந்துபடைத்தனர் என்பதை,

"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"

என்ற பாடலடிகளின் வழி அறியலாம் (Balasubramaniyam, 2004). இவ்வாறு விருந்து நடைபெறும் இல்லத்தில் உள்ள கணவனும் மனைவியும் ஒத்து வாழ்ந்தனர். அதாவது அவர்களது இல்வாழ்க்கை விருந்தோம்பலால் செம்மையுற நடைபெறுகின்றது என்பது பொருளாகும்.

## விருந்தோம்பல் நயம்

எந்நாட்டினராயினும், எம்மொழியைப் பேசுபவராயினும் நட்பு கொள்கின்ற நல்லெண்ணத்துடன் வீடு தேடி வருகின்ற விருந்தினரை வரவேற்று உபசரிப்பவர்களே தம் மறுமையின்பத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர் என்பதை,

"இன்சொல் அளாவல் இடம் இனிது ஊண் யாவர்க்கும்

வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்

முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்

விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து" (Kanimetaviyar, 1887)

எனவரும் அடிகள் மென்மையான பற்களை உடைய பெண் விருந்தினராக வருகின்ற அனைவரிடமும் இனிமையான சொற்களால் பேசி உள்ளம் கலந்து உறவாடி அவர்கள் தங்குவதற்கு இடம் ஆடைஅணிகலன்கள் மற்றும் இனிமையான உணவை ஆகியவற்றைக் கொடுத்து உபசரிப்பவர்களைத் தேவர்கள் விருந்தினராக ஏற்றுக்கொள்வார்கள் என்றுரைக்கின்றது.

## விருந்தோம்பலில் மகளிரின் மாண்பு

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

என்ற அடிகளில் தொல்காப்பியர் விருந்தோம்பல் என்பது மகளிர் கடமைகளில் தலையாய பண்புகளில் ஒன்றாக உள்ளது என்கிறார் (Ilampuranar, 1953).

இல்லறத்தில் இன்பம் தவழ வேண்டுமானால் தலைவி தம் காதலனுக்குத் தோழியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருந்து பிள்ளைகளைப் பெற்று இல்லறத்தை நன்றாக நடத்தினர். அது மட்டும் இல்லாமல் நம் இல்லறத்திற்கு வரும் விருந்தினரையும் இன்முகத்தோடு உபசரித்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்து மகிழ்வது கற்புள்ள மனைவியின் கடமை என்பதை,

"நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்

இல்புறம் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்

மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்

கற்புடையாள் பூண்ட கடன்"

என்ற அடிகள் மூலம் பண்டைத் தமிழர் இல்லறத்திலே இன்பமாக இருப்பதற்கு ஓர் காரணம் விருந்தோம்பல் என்றுணரலாம்.

## விருந்தோம்பலில் மகளிரின் இயல்பு

பெண்கள் தன்னுடைய செயல்களைக் கணவன்மார்கள் பாராட்ட வேண்டுமென்றே விரும்புவார்கள். தன்னுடைய சமையலைக் கணவன் பாராட்டினால் அதற்கு மகிழ்ச்சியடையாத

மனைவியே இல்லை. குற்றங்கூறினால் கோபப்படாத மனைவியும் இல்லை. இந்த செயலை இன்றும் நம் குடும்பங்களில் காணலாம்.

ஒரு பெண் தன்னுடைய கணவனுக்கு விருந்து படைக்க புளித்த தயிரைத் தன் காந்தள் போன்ற மெல்லிய விரல்களால் பிசைந்த போது அவளது ஆடை அவிழ்ந்துவிட்டது. தன்னுடைய கையைக் கழுவாமலேயே ஆடையைச் சரிசெய்து கொண்டாள். புளிக்கறி அடிப்பிடிக்காமல் இருக்க அடிக்கடி கலக்கிவிட்டுக் கொண்டே இனிய புளிக்கறி செய்தாள். அப்புளிக்கறியைக் கணவனுக்குப் விருந்தாக்கினால். கறி மிகவும் நன்றாயிருக்கின்றது என்று சொல்லிக் கொண்டே சாப்பிட அதைக் கண்ட அவளுடைய முகம் மகிழ்ச்சியடைந்தது. இக்கருத்தை,

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்

குவளை உண்கண் குய்ப்புகை கமழத்

தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

இனிது எனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிந்தன்று ஒண்ணுதல் முகனே”

என்ற அடிகள் பெண்கள் தன்னுடைய கணவனுக்கு விருந்து சமைக்கும் இயற்கைத் தன்மையை எடுத்துரைக்கின்றன (Somasundaranar, 2007).

## விருந்தினரைப் பேணல்

கணவன் மனைவியிடையே ஊடல் ஏற்பட்டிருக்கும் போது மனைவியின் நிலையைப் பார்த்த கணவன் தன்னுடைய வீட்டிற்கு இப்போது விருந்தினர் யாராவது வந்தால் தன்னுடைய மனைவியின் முகத்தில் சிரிப்பைக் காணலாம் என்பதை,

“புகை யுண்டு அமர்ந்த கண்ணன் தகைபெற

பிறை நுதற் பொறித்த சிறுநுண் பல்வியர்

அம்துகில் தலையில் துடையினள் நட்புலந்து

அட்டிலோளே அம்மா அரிவை

எமக்கே வருகதில் விருந்தே சிவப்பு ஆன்று

சிறுமுள் எயிறு தோன்ற

முருவல் கொண்ட முகம் காண்கம்மே” (Balasubramaniyam, 2004)

எனவரும் அடிகள், விருந்தினர்கள் வந்தால் சிறிய முட்கள் போன்ற பற்கள் தோன்றும்படி புன்சிரிப்பைத் தன்னுடைய மனைவியின் முகத்தில் காணலாம் என்றார். இவ்வாறு விருந்தினர் வீட்டிற்கு வந்தால் இவர்களுக்குள் இருக்கும் ஊடலை மறந்து அவர்களைத் தன்னுடைய இன்முகத்துடன் வரவேற்கும் தமிழர்களின் சிறந்த பண்பை இதன் மூலம் அறியலாம்.

கணவன் மனைவி இருவரும் சேர்ந்திருந்தால் மட்டுமே விருந்தோம்புதல் செய்ய இயலும். கணவன் தன்னைவிட்டுப் பிரிந்திருந்தால் மனைவாழ்க்கைக்குரிய அறங்களைச் செய்ய முடியாத நிலையில் கண்ணகி இருந்ததை,

“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”

என்று இதயக் குமுறலோடு கண்ணகி எடுத்துக் கூறினாள் (Sellapan, 1994). பெறும் பொருளை இழந்தமைக்காகக் கூட வருந்தாத கண்ணகி பழம்பெருமையடைய விருந்தின் சிறப்பைப் போற்ற இயலாமையை எண்ணி வருந்தியதாக சிலப்பதிகாரம் விருந்தின் சிறப்பை எடுத்துக்கூறுகின்றது.

## விருந்தோம்பலால் ஏற்படும் நன்மைகள்

தமிழர்களின் ஒவ்வொரு கலாச்சார பின்னணியிலும் ஓர் அறிவியல் உள்ளது. தங்களின் விருந்தோம்பல் பழக்கவழக்கத்தோடு பல அறிவியல் உண்மையும் காணப்படுகின்றன.

அக்காலத்தில் தமிழர்களின் வீட்டின் முன்பு நீர் வைக்கப்பட்டிருக்கும் இதன் பின்னுள்ள அறிவியல் என்னவென்றால் நம்முடைய வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் அன்னீரில் கை கால்களை கழுவிய பின்னர் வீட்டுக்குள் வருவது வழக்கம் அவ்வாறு செய்யும் பொழுது கை கால்களில் இருக்கும் கிருமிகள் சுத்தம் செய்யப்படுகிறது. இதனால் நமக்கு வரும் நோய் தொற்று தடுக்கப்படுகிறது.

விருந்தினருக்கு வாழை இலையில் உணவு பரிமாறும் வழக்கத்தை தமிழர்கள் பின்பற்றினர் வாழை இலையின் குறுகிய பாகம் அமர்ந்து இருப்பவர்களின் இடதுபுறமும் தடிமனான பகுதி வலது புறமாகவும் உணவின் பயன்பாட்டை பொருத்தே வைக்கப்படுகின்றது. சாதம் அதற்கான கூட்டு வகைகள் போன்றன அடிக்கடி எடுத்து உண்ணக்கூடியவை இலையின் தடிமனான பகுதியில் வைக்கப்படும். அடிக்கடி பயன்படுத்தாத ஊறுகாய் உப்பு போன்றவை இடது புறமாக இருக்கும் இதனால்தான் இலையில் வைக்கப்படும் உணவு இந்த இச்சாரம்சத்தில் உள்ளது.

வாழை இலையில் சாப்பிட்டால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது இது மட்டுமல்லாமல் புற்றுநோய் வராமலும் தவிர்க்கப்படுகிறது இதில் உள்ள குளோரோபில் அல்சர் மற்றும் தோல் சம்மந்தமான நோயை உருவாவதை தடுக்கிறது.

## முடிவுரை

விருந்தோம்புதல் முன்னர் குறிப்பிட்டது போல் இல்லாவிட்டாலும் ஏதோ கடமைக்காகச் செய்வதைப் போல் தற்போது தோற்றமளிக்கிறது என்றாலும். கூடியுண்ணும் கூட்டுணவே உடலுக்கும் உயிருக்கும் உள்ளத்திற்கும் உணர்விற்கும் மிகமிக இனிமையாக இந்த உலகினை வாழ வைக்கிறது. ஆதனால் தான் பழந்தமிழன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றான். இக்கொள்கையை வரும் தலைமுறையினர் ஏற்புடையதாகக் கருதமாட்டார்கள். ஒரு குடும்பத்தில் காலை மதியம் மாலை என மூன்று வேளைகளிலும் அனைவரும் ஒன்றாக கூடி உணவு உண்ணவே நேரம் இருப்பதில்லை. தந்தை எப்போது சாப்பிட வருவார் என்று மகனோ மகளோ கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவிற்கு அவர்களுக்குள்ளே ஒரு நீண்ட இடைவெளி உருவாகி வருவதால் விருந்தோம்பல் பண்பாடு குறைய ஆரம்பித்து விடுகிறது. இக்காலச் சூழ்நிலையில் மனிதன் எதிர்பார்ப்பது பணம் ஒன்றை மட்டும் தான். எனவே அன்பு, பாசம், விருந்து உபசரிக்கும் பழக்கம் இவற்றை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டான். இவ்வாறு இருக்க குழந்தைகளும் தம் பெற்றோர்களைத்தான் பின்பற்றும். இப்படிபட்ட சூழலில் பெற்றோர்கள்தான் அக்குழந்தைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். 'வேர்' போன்று இருக்கும் நம் கலாச்சாரமாகிய விருந்தோம்பல் பண்பை அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் விடுமுறை நாட்களிலாவது அருகில் அமர்ந்து கொண்டு கலந்து பேசுதல், அனைவரும் சேர்ந்து உணவு உண்ணுதல் போன்ற பழக்கத்தைக் கடைபிடிக்க வைக்க வேண்டும். இவ்வாறு இருந்தால்தான் வரும் தலைமுறையினர் கொஞ்சமாவது அவற்றைப் பின்பற்றுவார்கள். இந்த பண்பாட்டின் தலையாய ஒன்றாகிய விருந்தோம்பல் பண்பாட்டை வளர்க்க இதுபோன்ற வழிமுறைகளைப் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர வேண்டும். அப்போதுதான் விருந்தோம்பல் பண்பு குறையாமல் இருக்கும்.

## References

Balasubramaniyam, K.V. (2004) Nattrinai, New Century Book House, Chennai, India

Ilampuranar, (1953) Tholkappiyam, Kalaga Veliyedu, Chennai, India

Kanimetaviyar, (1887) Eladi, Kalaratna Printing Press, Chennai, India

Sellapan, S. (1994) Silapathikaram, Bharathi Pathippagam, Chennai, India

Somasundaranar, P.V. (2007) Kurunthogai, Kalaga Veliyedu, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License